# கழக – கூட்டணிக் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பு!



திருமங்கலம் சட்டமன்ற திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் சேடப்பட்டி மணிமாறனை சமத்துவ மக்கள் கழக தலைவரும் தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரிய தலைவருமான எர்ணாவூர் நாராயணன் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். மேலப்பட்டி, திருமங்கலம், பேரையூர் கிராமத்தில் கிராம மக்களிடையே கலந்துரையாடல் நிகழ்த்தினார்.மேலும் நாடார் உறவின்முறை சங்கங்கள், வணிகர்கள் சங்க நிர்வாகிகளை சந்தித்து வாக்குகள் சேகரித்தார்.உடன் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர். எஸ்.டி.பாண்டியன், பேரவை மாநில பொருளாளர் கண்ணன், வடசென்னை மாவட்ட செயலாளர் பாஸ்கர், தேனி கமலக்கண்ணன், விருதுநகர் மதுரை மாவட்ட செயலாளர் பாஸ்கர், மாவட்ட செயலாளர் மாரிமுத்து, மதுரை மாவட்ட செயலாளர் குமார், தேனி மாவட்ட செயலாளர் சுரேஷ், வழக்கறிஞர் ரகுநாதன் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ரிஷிவந்தியம் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் வசந்தம் கார்த்திகேயனுக்கு கழக மாற்றுத் திறனாளிகள் அணி சார்பில், 200 மாற்றுத் திறனாளிகள், கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் தலைமையில் சிறப்பு வண்டிகளில் 15 கிலோ மீட்டர் தூரம், கொளுத்தும் வெய்யிலில் கையில் கருப்பு, சிவப்பு கொடி ஏந்திச் சென்று கழக அரசின் சாதனைகளை பொது மக்களிடம் விளக்கிச் சொல்லி உதயசூரியனுக்கு வாக்குகள் சேகரித்தனர்.





மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஆதரவு பெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் எல்சுந்தர்ராஜ் அவர்களை ஆதரித்து திருவொற்றியூர் எட்டாவது வார்டில் தலைமை பொதுக் குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில் வட்ட கழக செயலாளர் டி.சி.வி.மணிகண்டன் முன்னிலையில் கே.ஆர். ராமசாமி நகர், மஸ்தான்கோயில், ஒற்றை வாடை, எண்ணூர் பீச் ரோடு, கக்கன் நகர் போன்ற பகுதிகளில் வேட்பாளருக்கு ஆதரவாக பொதுமக்களிடமும் வணிகர்களிடமும் வாக்கு சேகரித்தனர். மாவட்ட கழகப் பிரதிநிதிகள் சு.சந்தானம், டி.டி.எம்.பாபு, ஒய்.நந்திவர்மன், ஜெ.பி.சந்தானகிருஷ்ணன், அ.அருளானந்தம், சுகந்தா முனுசாமி மற்றும் கூட்டணி கட்சித் தோழர்களும் திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



சென்னைக் கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி அயலக அணி அமைப்பாளர் எஸ்.எம்.முகம்மது இப்ராஹிம் தலைமையில் 96 வது வட்டச் செயலாளர் எ.வேதா, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் க.பிரகதீஸ்வர், பாலாஜி, ரவி, சாதிக், ஜெயபிரகாஷ், ஆர்.கிளாரா ஆகியோர் முன்னிலையில் கழக வெற்றி வேட்பாளர் கார்த்திக் மோகனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தோம். உடன் சி.பிரேம்குமார், பி.தினேஷ், BLA2, BDA, BYO வென்றி மோசஸ், கீரிஸ் தீபக், சத்யா, ரிச்சர்ட், பாபு, ஜெஸ்ஸி, ஜுலி, ஜாய் மற்றும் நிர்வாகிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



பம்மல் தெற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக களத்தில் இளைஞர் அணி பேரணியின் மூலம் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் செ.அமிர்தராஜ் தலைமையில் பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் வே. கருணாநிதி முன்னிலையில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



துறைமுகம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர் பி. கே. சேகர்பாபு அவர்களை ஆதரித்து 57 அ வட்ட தி. மு. க. சார்பில் மலைய பெருமாள் தெரு மசூதியில் தொழுகை முடித்து வந்த இஸ்லாமியர்களிடம் பகுதி துணை செயலாளர் கே. ஆர். அபரஞ்சி, வட்ட செயலாளர் பா. அண்ணாதுரை, மாவட்ட பிரதிநிதி டி. எஸ். சேகர், பொறுப்பாளர் ப. கார்த்திக் வட்ட துணை செயலாளர் சி. காந்தி, பகுதி பிரதிநிதி தேவகானம் ராஜா, கழக பிரமுகர் அக்பர் அலி, வர்த்தகரணி பகுதி அமைப்பாளர் பூக்கடை வெங்கடேசன், அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள் பூக்கடை ராஜா, எஸ். கே. பாரூக் சுல்தான், சுமன்ராஜ், தமிழ்வாணன், வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம். வருண்குமார், பாக முகவர்கள் பா. பன்னீர்செல்வம், தமிழ்வாணன், அ. கிஷோர்,வேலு மற்றும் மற்றும் கழக தோழர்கள் இஸ்லாமியர்களிடம் முதல்வர் அவர்களின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

நே.சிற்றரசு – பெ.சேகர் – மா.பா.அன்புதுரை – எம்.என். விஷ்ணு பங்கேற்பு!

## சென்னை மேற்கு மாவட்ட தொண்டர் அணியின் சார்பில் மருத்துவர் எழிலன் நாகநாதனுக்கு தீவிர வாக்கு சேகரிப்பு!

### தொண்டர் அணி அமைப்பாளர் மு.செந்தில்குமார் வேண்டுகோள்!

சென்னை, ஏப்.19-

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நமது, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அண்ணா நகர் சட்ட மன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் நே.சிற்றரசு ஆணைக்கிணங்க, சென்னை மேற்கு மாவட்ட தொண்டர் அணியின் சார்பில் இன்று (19.04.2026 -ஞாயிற்றுக்கிழமை) காலை 07:00 மணிக்கு, சென்னை மேற்கு மாவட்ட தொண்டர் அணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 113, 113 (அ) ,113 (ஆ) வட்டங்களில் பிரச்சாரம் செய்வதற்கு மாவட்ட கழகம் உத்தரவுபடி 113 (ஆ) வட்டத்திற்கு உட்பட்ட கோடம்பாக்கம் மார்க்கெட், பிள்ளையார் கோயில் தெரு, கோமைமணி தெரு, லாலா தோட்டம், கோடம்பாக்கம் ரயில்வே ஸ்டேஷன் சாலை முழுவதும் தீவிர வாக்கு சேகரிப்பு சென்னை மேற்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் மு.செந்தில்குமார் தலைமையில், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் மா.பா. அன்பு துரை முன்னிலையில், 113 'ஆ' வட்ட கழக செயலாளர் எம்.என்.விஷ்ணு வரவேற்பில் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் மருத்துவர் நா.எழிலன் நாகநாதனுக்கு தீவிர வாக்கு சேகரிப்பு நடைபெறுகிறது.

எனவே ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியின் பார்வையாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட தொண்டர் அணியின் தலைவர் அ.சதீஷ், துணைத்தலைவர் மகேஸ்வரன் மற்றும் துணை அமைப்பாளர்கள் பார்த்திபன், மன்னார்சாமி, வேல்முருகன், மாலிக்பாஷா, முருகன் மற்றும் பகுதி தொண்டர் அணியின் அமைப்பாளர்கள், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி அமைப்பாளர் துரை ராஜ், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி அமைப்பாளர் ஹரிகிருஷ்ணன், அண்ணா நகர் தெற்கு பகுதி அமைப்பாளர் பிரபு, அண்ணா நகர் வடக்கு பகுதி அமைப்பாளர் பி.கே.கோபிநாத், சேப்பாக்கத்தின் பகுதி அமைப்பாளர் ஆகாஷ், திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் பாலு, மற்றும் சென்னை மேற்கு மாவட்டத்தை சார்ந்த, தொண்டர் அணியின் அனைத்து பகுதி துணை அமைப்பாளர்களும், 113 'ஆ' வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும், தீவிர வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் மு.செந்தில்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் மார்க்சிஸ்ட் வேட்பாளர்

## எஸ்.சுந்தர்ராஜை ஆதரித்து திருவொற்றியூர் 8வது வட்டத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு!

### இரா.முருகேசன் தலைமை! டி.சி.வி.மணிகண்டன் முன்னிலை!

சென்னை, ஏப்.18-

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஆதரவு பெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் எல்.சுந்தர்ராஜ் அவர்களை ஆதரித்து திருவொற்றியூர் எட்டாவது வார்டில் தலைமை பொது குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில் வட்ட கழக செயலாளர் டி.சி.வி. மணிகண்டன் முன்னிலையில் கே.ஆர்.ராமசாமி நகர், மஸ்தான்கோயில், ஒற்றை வாடை, எண்ணூர் பீச் ரோடு, கக்கன் நகர் போன்ற பகுதிகளில் வேட்பாளருக்கு ஆதரவாக பொதுமக்களிடமும் வணிகர்களிடமும் வாக்கு சேகரித்தனர்.

மாவட்ட கழகப் பிரதிநிதிகள் சு.சந்தானம், டி.டி.எம். பாபு, ஒய்.நந்திவர்மன், ஜெ.பி.சந்தானகிருஷ்ணன், அ.அருளானந்தம், சுகந்தா முனுசாமி, கிழக்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.எம்.மணிகண்டன், தினேஷ் வேலன், எம்.எஸ்.பாண்டியன், வி. ஆர்.சீனிவாசன், செல்வதாஸ், எம்.கணேசன், சின்ன பாப்பா சத்திய குமார், எம். எஸ்.பி.பிரபாகரன் மூர்த்தி, தி.மு.சரவணன்,

இடது கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த தென் சென்னை மாவட்ட பொருளாளர் மா.சிந்தன், 123 வது வார்டு மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் சரஸ்வதி, மல்லிகா, வசந்தி, பழனி, சிங்காரம், விஜயலட்சுமி ,சீதா, தமிழ்ச்செல்வி, செல்வகுமாரி, மல்லிகா, அபிநயா, நித்யஸ்ரீ, தனுஸ்ரீ பிரியா ,விஜயலட்சுமி, சக்திவேல், மனோகரன், லெனின் நான்சி, ஸ்ரீ சுவேதா வேல்முருகன் சிவக்குமார் உள்ளிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களும் ஆனந்த் சிவகுமார் மோகன் மற்றும் கூட்டணி கட்சித் தோழர்களும் திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

மயிலை தொகுதி வெற்றி வேட்பாளர் த.வேலுவை ஆதரித்து

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வாக்குச் சேகரிப்பு!

### பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை!

சென்னை, ஏப்.19-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று மயிலை மேற்கு பகுதியில் வாக்கு சேகரிக்கிறார்.

இது குறித்து பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை வருமாறு:-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதியில் வெற்றி வேட்பாளர் மயிலை த. வேலுவை ஆதரித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று பிரசாரம் செய்கிறார்.

இன்று (19.04.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணிக்கு எல்டம்ஸ் ரோடு தேனாம்பேட்டையில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இதில் மயிலை மேற்கு பகுதிக்குட்பட்ட மாநில மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அனைத்து நிர்வாகிகள் பங்கேற்குமாறு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மின் கழக தொ.மு.ச. சார்பில்

## கழக வேட்பாளர் ஆர்.டி.சேகரை ஆதரித்து பிரச்சாரம்!

### சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் தலைமை!

சென்னை,ஏப்.19-

பெரம்பூர் 44 வது வட்டம் துளசிங்கம் தெரு, பெரம்பூர் மார்கெட் ஆகிய பகுதிகளில் பெரம்பூர் தொகுதி கழக பொறுப்பாளர் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜோயல், துணை முதல்வர் அவர்களின் உதவியாளர் செந்தில், ஆகியோர் ஆலோசனை படி பெரம்பூர் பகுதி கழக செயலாளர் ஜெயராமன், 44 வது வட்ட கழக செயலாளர் பி.டி.சி.ஆறுமுகம் அவர்களின் வழிகாட்டலில் பெரம்பூர் 44 வது வட்ட பகுதியில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தோம் இதில் தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் மாநில முன்னாள் தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் ஆகிய எனது தலைமையில் சென்னை வடக்கு திட்ட நிர்வாகிகள் டி.அருள்,எ.ராஜேந்திரன், கு.மாறன், ஆர்.சங்கர், பி.சீனு, வேதமணி, ஜெகன் நாதன் இளங்கோவன்மற்றும் உறுப்பினர்கள் சங்க மூத்த முன்னோடிகள் அண்ணன் க.செல்வராஜ், அண்ணன் வி.கோவிந்தன், ஓய்வு பெற்றோர் சங்க திட்ட செயலாளர் வடக்கு ஏ.எல். சங்கர், தியாகராஜன், ஜெயகுமார், சகாயம்,ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கழக – கூட்டணிக் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பு!



திருவள்ளூர் தொகுதி பூண்டி மேற்கு ஒன்றியத்தில் திருவள்ளூர் தொகுதி போட்டியிடும் கழக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன், உதயசூரியன் சின்னத்திற்கு பூண்டி மேற்கு ஒன்றிய செயலாளர் தா. மோதிலால், முன்னிலையில் பூண்டியில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் வாக்கு சேகரத்தினர் அப்போது பூண்டில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தார்கள் உடன் பொதுக்குழு உறுப்பினர் பா.சிட்டிபாபு, மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள்கள் பலர் கலந்து கொண்டனர்



ராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வெல்லும் வேட்பாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கத்தை ஆதரித்து நகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில்,கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் வாக்கு சேகரித்தார்.உடன் தமிழ்நாடு பட்டு வாரிய தலைவர் கே. மணிகண்டன், என்.அம்பாள் குமார், மணிகண்டன்,எஸ். நசீம் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.





மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் டி.ஜே.கோவிந்தராஜனை ஆதரித்து திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் அவர்களின் அறிவுறுத்துதலின்படி எல்லாபுரம் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.ஜெ.மூர்த்தி அவர்களுடன் தொகுதி பார்வையாளரும், மாநில கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை துணை செயலாளர் சைதை எம்.எஸ்.ஹரிபாபு தேர்தல் களப்பணிகளை குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் எல்லாபுரம் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.





இராயபுரம் கிழக்கு பகுதி 50 வது வட்டம் ஜீவரத்தினம்நகர் மீனவர்கள் குடிசைமாற்றுவாரிய குடியிருப்பு பகுதியில் முன்னாள் வட்டசெயலாளர் மா.தாஸ், முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஜான்மேரிதாஸ் கழக தோழர்கள் பெரியநாயகராஜ் , சி.ராஜா , ஏ. சசிகுமார், எஸ்.கோவிந்தராஜ் ஆகியோர் இராயபுரம் தொகுதி வேட்பாளர் டாக்டர் ஆ.சுபேர்கானைஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.



பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஆ. கிருஷ்ணசாமி ஆதரித்து பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் ஆலோசனைப்படி ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்கள் இதில் திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி சார்ந்த தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் தோழர் எல்.சுந்தரராஜ் அவர்களை ஆதரித்து சுத்தியல் அரிவால் நட்சத்திரம் சின்னத்திற்கு 10வது வட்டத்தில் வட்டக் செயலாளர் எஸ்.தமிழ்ச்செல்வன் தலைமையில் வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில் மாவட்டத் துணை அமைப்பாளர் பா.பாலஉமாபதி , வட்டத் துணைச் செயலாளர் முரளி, மனோகரன், வட்ட பிரதிநிதி ராஜேந்திரன், மாவட்டத் துணை அமைப்பாளர் ரவிக்குமார், பாக முகவர்கள் பால்ராஜ், முருகன், சந்துரு, சேகர், பாபு, உள்ளிட்ட கழகத் தோழர்களும் கம்யூனிஸ்ட் தொண்டர்களும் தோழர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.